**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 305** **நாள் : 08.10.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் ரிப்பன் கட்டட வளாகத்தில் முதல்வர் மருந்தகத்தினை இன்று (08.10.2025) திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இன்று (08.10.2025) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், ரிப்பன் கட்டட வளாகத்தின் பெரியமேடு சாலைப் பகுதியில் ரூ.12 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சியின் புதிய கட்டடத்தில் முதல்வர் மருந்தகத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்ட முதல்வர் மருந்தகம் எனப்படும் இந்தத் திட்டமானது 24.02.2025ல் செயல்பாட்டிற்கு வந்துள்ளது. தமிழ்நாடு முழுவதும் 1000 முதல்வர் மருந்து கடைகள் மூலம் ஜெனரிக் வகை மருந்துகளைக் குறைந்த விலையில் ஏழை, எளிய, நடுத்தர மக்கள் அனைவருக்கும் தரமான மருந்து மற்றும் மாத்திரைகளை வழங்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மருத்துவ சேவை கழகம் மூலம் முதல்வர் மருந்தகங்களுக்கு 294 ஜெனரிக் மருந்துகளை கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் 44 முதல்வர் மருந்தகங்கள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இவற்றுள் 9 மருந்தகங்கள் தொழில் முனைவோர்களும், 35 மருந்தகங்கள் கூட்டுறவு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகிறது. இவற்றுக்கு தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் மூலமாக தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திலிருந்து மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கத்திற்கு அனுப்பப்பட்டு, அதன் மூலமாக முதல்வர் மருந்தகங்களுக்கு தேவைப் பட்டியலின்படி அனுப்பி வைக்கப்படுகிறது.

முதல்வர் மருந்தகத்தில் கொள்முதல் விலையிலிருந்து 25% தள்ளுபடியில் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதால், மக்கள் மருந்தகத்தை விட விலை மிகவும் குறைவாக இருக்கிறது.

முதல்வர் மருந்தகத்தில் தனியார் மருந்துக் கடைகளை விட 75% வரை விலை குறைவாகக் கிடைக்கிறது.

| வ.எண் | மருந்தின் பெயர் | தனியார் | முதல்வர் மருந்தகம் |
|---|---|---|---|
| 1 | PARACETAMOL 500 MG | Rs.10.00 | Rs.4.73 |
| 2 | CETIRIZINE 10 MG | Rs.15.00 | Rs.3.71 |
| 3 | DICLOFENAC 50 MG | Rs.23.00 | Rs.3.71 |
| 4 | GLIBENCLAMIDE 5 MG | Rs.17.66 | Rs.3.71 |

| | | | |
|---|---|---|---|
| 5 | METFORMIN 50 MG | Rs.26.00 | Rs.4.45 |
| 6 | ATORVASTALIN 10 MG | Rs.55.32 | Rs.5.94 |
| 7 | CLOPIDOGREL 75 MG | Rs.74.48 | Rs.11.78 |
| 8 | ENALAPRIL 5 MG | Rs.41.44 | Rs.3.71 |
| 9 | AMLODIPINE 5 MG | Rs.28.00 | Rs.3.71 |
| 10 | PANTOPRAZOLE 40 MG | Rs.100.00 | Rs.8.16 |

இன்சுலின் மருந்துகள் சந்தை மதிப்பை விட மிகக் குறைந்த விலையில் முதல்வர் மருந்தகத்தில் கிடைக்கிறது.

| வ.எண் | மருந்தின் பெயர் | Brand Name | விலை | நமது விலை |
|---|---|---|---|---|
| 1 | BI PHASIC ISOPHENE 30/70 INJ 40IU | XSULIN 30/70 INJ | Rs.178.29 | Rs.89/- |
| 2 | BI PHASIC ISOPHENE 50/50 INJ 40IU | XSULIN 50/50 INJ | Rs.178.29 | Rs.87/- |
| 3 | BI PHASIC ISOPHENE 30/70 INJ 40IU 100IU CATRIDGE | EQUISULIN 30/70 CATRIDGE | Rs.293.57 | Rs.164/- |

இவ்வாறாக திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வந்த முதல்வர் கூட்டுறவு மருந்தகம், பெருநகர சென்னை மாநகராட்சி கூட்டுறவு பண்டகசாலைக்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்த முதல்வர் மருந்தகம் ரூ.12 இலட்சத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் கட்டப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக மாண்புமிகு மேயர் அவர்களால் இன்று (08.10.2025) திறந்து வைக்கப்பட்டது. மேலும், மற்ற மருந்தகங்களை விட குறைந்த அளவில் அனைத்து விதமான ஜெனரிக் மருந்துகள் விற்பனை செய்யப்படுவதால் பொதுமக்கள் முதல்வர் மருந்தகத்தினை பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்வில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (பொது) திரு.எஸ்.ராஜேஸ்வரி, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் திருமதி மு. உமா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**